செய்தி வெளியீடு எண். 156 நாள். 21.03.2018

**மாதந்தோரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வண்ணம் விளையாட்டுப் போட்டிகள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு**

திருவள்ளூர் மாவட்டத்தில் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள் 23.03.2018 அன்று நடத்தப்படவுள்ளது. இதில் தடகளம், நீச்சல், கையுந்து பந்து மற்றும் இறகுபந்து ஆகிய போட்டிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக ஒருங்கிணைந்த விளையாட்டரங்கத்தில் காலை 9.00 மணியளவில் தொடங்கவுள்ளன.

இப்போட்டியில் கலந்துக்கொள்ள வயது வரம்பு இல்லை. ஆண், பெண் இருபாலரும் கலந்துக்கொள்ளலாம். தனித்தனியே போட்டிகள் நடைபெறும். விருப்பம் உள்ள மாணவ, மாணவியர்கள் தங்கள் பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து வயது மற்றும் படிப்புச் சான்றிதழ் (Bonafied Certificate) பெற்று போட்டிகள் நடைபெறும் அன்று காலை 8.00 மணியளவில் நுழைவு படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

மாணவ, மாணவியர்கள் அல்லாத மற்ற இளைஞர்கள் கலந்துக்கொள்ள குடும்ப அட்டை நகலினை சமர்ப்பித்து நுழைவு படிவம் சமர்ப்பிக்கும் நபர்கள் மட்டுமே போட்டியில் பங்கேற்க முடியும். இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**